மே, 2022 ISSN 2012 - 5054

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

# TVEC
# செய்தி



## உள்ளடக்கம்


1. தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறைசார் தொழில்வழிகாட்டல் தரவுத் தளம்
2. உலக தொழிலாளர் அமைப்புடனான புரிந்துணர்வு உடன்படிக்கை
3. தொழிற்பயிற்சி நிறுவகங்களில் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள்
4. நிபுணதா உதானய 2022
5. Impact of COVID19 Pandemic on the Labour Market
6. அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதும் மற்றும் நாளதுவரையாக்கல் செய்யப்பட்டுள்ளதுமான தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் 2021/2022


2022 மே மாதம் 31 ஆம் திகதி வரையில் விநியோகிக்கப்பட்டுள்ள NVQ சான்றிதழ்களின் எண்ணிக்கை **554,959** ஆகும்.

# உலக தொழிலாளர் அமைப்புடனான புரிந்துணர்வு உடன்படிக்கை

டிஜிட்டல் முறைமையானது செயற்படத் தொடங்குவதற்கு முன்னர் அறிவுசார் கணிப்பீட்டு முறைமை (eRPL) மற்றும் திறன்கள் அனுமதிப்பத்திரங்களை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்கான நிதி வழங்கல் தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு என்பன கைச்சாத்திட்டுள்ளன.

இதன் மூலம், தேசிய தொழிற்தகைமை விருதளிப்பிற்கு முன்னர் அறிவுசார் கணிப்பீட்டினை மேற்கொண்டு தேசிய தொழிற் தகைமை சான்றிதழ்களை வழங்கி ஒரு வருடத்திற்கும் கூடுதலான காலப்குதியிற்கு தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள நிபுணர்களுக்கு திறன்சார் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் (Skills Passport) ஆகிய செயற்பாடுகளை மிகவும் வெற்றிகரமாகவும் மற்றும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.




இதன் மூலம் தேர்ச்சிகள் தொடர்பான அங்கீகாரமொன்றினை வழங்குதல் தொழிலாளர் சந்தையில் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு உயர் அங்கீகாரம் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவற்றினை வழங்குவதற்கான சந்தரப்பங்களை வழங்குவதுடன் இம் முறைகளை டிஜிட்டல் மயமாக்கியமையினால் வாடிக்கையாளருக்கு மிகவும் இலகுவான முறையில் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய சந்தரப்பமானது ஏற்பட்டுள்ளது. பல வருடங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள தகைமைகளற்ற தொழிலாளர்களின் தேர்ச்சிகளை கணிப்பீட்டிற்கு உட்படுத்தி தேசிய தொழிற்தகைமை முறைமை மூலம் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் அவர்களது சேவைக் காலத்தினை மதிப்பீடு செய்து திறன்சார் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் இம் முறையினை மிகவும் வசதியாக்குதல் இத் திட்டத்தின் ஒரு நோக்கமாகும்.

இப் புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் தற்போது நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ள நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ள நசீடு கணிப்பீட்டினை மிகவும் வசதியான முறையில் மேற்கொள்வதற்கு அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் வெளிநாடுகளில் தொழில்களை மேற்கொண்டு மீண்டும் இந் நாட்டிற்கு வருகைதரும் தொழிலாளர்களுக்கு அவர்களது அனுபவங்களை உரிய முறையில் கணிப்பீட்டிற்கு உட்படுத்தி சான்றளிப்புகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் பின்வருவன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன,

- முன் அனுபவ கணிப்பீட்டுச் செயற்பாடு தொடர்பாக உள்கட்டுமான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான முறைமையினை விருத்தி செய்தல், கணிப்பீடுகள் தொடர்பாக கணிப்பீட்டாளர்களை பதிவு செய்தல், ஆவணங்களைத் தயாரிப்பதற்கான இலத்திரனியல் முறைமையினை அபிவிருத்தி செய்தல்
- இம் முறை தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரதும் தேர்ச்சிகளை மேம்படுத்தும் பொருட்டு இலத்திரனியல்/ டிஜிட்டல் மயமாக்கல் முறை தொடர்பாக தொழில் வழிகாட்டல் (இலத்திரனியல் கணிப்பீடு) ஒன்ஷறினை மேற்கொள்ளல் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- e-RPL முறைமையினை மிகவும் பரந்த முறையில் நடைமுறைப்படுத்தல்
- திறன் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயற்பாட்டினை வலுப்படுத்தல் மற்றும் பிரச்சாரம் செய்தல்
- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாக நடைமுறையிலுள்ள சேவைகள் பற்றி மக்கள் மற்றும் அலுவலர்களை விழிப்புணர்வடையச் செய்தல்.




**மஞ்சுள விதானபத்திரண**
பதில் பணிப்பாளர் - தொழிற்துறைசார் உறவுகள் பிரிவு

# தொழிற்பயிற்சி நிறுவகங்களில் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள்



தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் தர உத்தரவாதம் மற்றும் ஒழுங்கமைப்பு நிறுவகமாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) மூலம் பயிற்சி பாடநெறிகளை நிறைவு செய்த மாணவர்களின் ஒட்டுமொத்த தரத்தினை உறுதி செய்வதற்காக பயிற்சி நிலையங்களில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தொழிற்துறைசார் நியமங்களிற்கு இணங்க திறன்கள் அபிவிருத்தியினைப் பேணித் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி முறைமை ஒன்றினை ஸ்தாபித்து பேணும் பொருட்டு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது அர்பணிப்புடன் சேவையாற்றுகின்றது. பயிற்சிகள் வெற்றிகரமாக வழங்கப்படுவதனை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு தேர்ச்சி நியமங்கள் தொடர்பாகவும் கற்றல் வழிகாட்டி மற்றும் கற்பித்தல் வழிபாட்டி போன்றவற்றினை அபிவிருத்தி செய்வதற்கு இவ்வாணைக்குழு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாணவர்களுக்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குவதற்கு பிரதானமான கற்றல் செயற்பாடுகள், செய்முறைச் செயற்பாடுகள் மற்றும் மாணவர்களால் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய அறிவினை உள்ளடக்கிய கற்றல் வழிகாட்டியானது தயாரிக்கப்படுவதுடன் கற்பித்தல் வழிகாட்டி மூலம் ஆசிரியர்கள் வினைத்திறனான முறையில் கற்பிப்பதற்கு ஏதுவாக அவசிய வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அரச மற்றும் தனியார் துறை பயிற்சி வழங்குநர்களுடன் இடம்பெற்ற கூட்டத்தில் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சின் வழிகாட்டலுடன் முன்னிலை தொழில்கள் தொடர்பாக கற்றல் வழிகாட்டி மற்றும் கற்பித்தல் வழிகாட்டி ஆகியவற்றினை அபிவிருத்தி செய்யும் செயற்பாடானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக தேசிய தொழிற் தகைமை மட்டம் (NVQ) 03 மற்றும் 04 இற்கான கற்றல் மற்றும் கற்பித்தல் வழிகாட்டிகள் அபிவிருத்தி செய்யப்படும். இதற்காக ILO மற்றும் YOULEAD ஆகிய நிறுவகங்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட முன்னிலை தொழில்கள்/ பாடநெறிகள் தொடர்பாக மேற்கூறப்பட்ட வழிகாட்டிகளைத் தயாரிப்பதற்காக உதவிகள் அளிக்கப்படுகின்றன. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் கற்றல் மற்றும் கற்பித்தல் வழிகாட்டிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு உரிய துறைசார் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் உடைய வளவாளர்கள் தொடர்பாக இவ் ஆணைக்குழுவின் ஆலோசனைக் குழுவின் மூலம் தெரியப்படுத்துதல் அமர்வொன்று நடாத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



**கலாநிதி தில்ருக்ஷி ஹேரத்**
உதவி பணிப்பாளர் - தேசிய தேர்ச்சி நியமங்கள், பாடத்திட்டங்கள் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு

# South Asia Member States working together to develop a common regional qualifications reference framework

The first technical meeting on the South Asia Qualifications Reference Framework (SAQRF), held virtually on 15 – 16 February 2022 with the participation of Member State representatives from Bangladesh, Bhutan, Nepal, India, Pakistan, Maldives and Sri Lanka, established the following objectives for the SAQRF:




- To encourage labour mobility and education services within and outside the region through transparency and trust in National Qualifications Frameworks (NQFs).
- To strengthen education and training systems within each country by developing policy frameworks for NQFs to improve the quality and effectiveness of qualifications systems and promote regional cooperation.

The Member State representatives acknowledged the existing bilateral and multilateral agreements between the Member States to mutually recognise qualifications and common occupational/skill standards.

Furthermore, the Member State representatives:

- **Acknowledged** the need for a common regional qualifications reference framework to support recognition of qualifications and skills to facilitate worker and learner mobility within and outside the region.
- **Recognised** the need to improve understanding of other Member States' national qualification system and associated quality assurance strategies.
- **Affirmed** that the Qualifications Reference Framework should be enabling and voluntary and not impinge upon other member nations' qualification systems and frameworks.
- **Recognised** that the regional qualifications framework be developed in parallel with processes for strengthening national qualification frameworks and qualifications systems through peer dialogue and review processes between the Member States.

The Member State representatives concluded the meeting by committing to participate in forthcoming dialogues and to convene a joint regional qualifications framework Task Force to further the development and management of a common reference qualifications framework.




**Dr. Janaka Jayalath**

Deputy Director General

# திறன்கள் மகிழ்ச்சி 2022

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையினை மாகாண மட்டத்தில் குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு “நிபுணதா உதானய 2022” வேலைத்திட்டமானது திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டு செயற்பாட்டு நிலையில் காணப்படுகின்றது.

“நிபுணதா உதானய 2022” என்ற தலைப்பின் கீழ் முதலாவது வேலைத்திட்டமானது 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டதுடன் இனங்காணப்பட்ட துறைசார் பல்வேறு வேலைத்திட்டங்கள் தொடர்ச்சியாக செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றது.

இவ் வேலைத்திட்டத்தினை முன்னிட்டு பல்வேறு பயிற்சிவேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுகின்றன.



**முச்சக்கரவண்டி சாரதிகள் தொடர்பாக தொழிற்கல்வி பாடநெறியினை அறிமுகம் செய்தல்**



**திறன்சார் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்**



**கணிப்பீட்டாளர்களுக்கு அலுவலக உடைகள் மற்றும் அடையாள அட்டைகளை வழங்குதல்**



**பயிலுநர்களுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கு அவசிய தொழில் சந்திப்புகளை நடாத்துதல்**



**தொழிற்பயிற்சி நிலைய அபிவிருத்தி**



**தெரிவு செய்யப்பட்ட தொழிற்துறைசார் நிபுணர்களுக்கான முன் அறிவுசார் கணிப்பீட்டு முறைமையினை அறிமுகம் செய்தல்**

நிபுணதா உதானய 2022 வயம்ப உதானய வேலைத்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்டவாறு குருணாகல் மாவட்டத்தில் தொழிற்துறைசார் வல்லுநர்களுடனான கூட்டமொன்று பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி குருணாகலில் இராஜாங்க அமைச்சின் கௌரவ அமைச்சர் நிபுணத்துவ வைத்தியர் சீதா அரம்பேபொல அவர்களின் தலைமையில் இடம்பெற்றதுடன் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் அபிவிருத்தியின் நிமித்தம் பயிலுநர்களை தொழிற்துறைசார் பயிற்சிகளில் ஈடுபடுத்துதல், தொழில்வாய்ப்புகளின் பொருட்டு அமர்த்துதல், தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ள நிபுணர்களின் பொருட்டு ஏதேனு முறைமையினை அறிமுகம் செய்தல், எதிர்கால தொழில்வாய்ப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடி அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

இத் தொழிற்துறை ஒன்றுகூடல்களை வலுவாக நடைமுறைப்படுத்தல் மாவட்ட திறன்கள் அபிவிருத்தி குழு மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் தொழிற்துறைசார் வல்லுநர்களின் யோசனைகள் மற்றும் கருத்துக்கள் மாவட்டத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க துறைசார் அவசிய அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதனை நோக்காகக் கொண்டுள்ளது.

சப்பிரகமுவ 2022 வேலைத்திட்டத்திற்குரிய பிரதான வேலைத்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறைவு செய்வதற்கும் மற்றும் இனங்காணப்பட்ட துறைகளை அபிவிருத்தி செய்வதற்கும் அவசிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே, சப்பிரகமுவ மாகாணத்திற்குரிய தொழிற்துறைசார் வல்லுநர்களுடனான ஒன்றுகூடல்களை மாவட்ட மட்டங்களில் நடாத்துவதற்கும் அதற்கிணங்க அவசிய செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதுவரையில் பாடசாலை மட்டத்தில் ஒட்டுமொத்த அடிப்படையில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



**பாடசாலை வேலைத்திட்டம் - இரத்தினபுரி**



**பாடசாலை வேலைத்திட்டம் - கேகாலை**



**ஏனைய வேலைத்திட்டம்**



**மஞ்சுள விதானபத்திரண**
பதில் பணிப்பாளர் - தொழிற்துறைசார் உறவுகள் பிரிவு

அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதும் மற்றும் நாளதுவரையாக்கல் செய்யப்பட்டுள்ளதுமான தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் 2021/ 2022

## 2021

NVQ Level 1 - 4

### Newly Developed NCSs & Curricular

- Contact Center Officer - NVQ level 03 & 04
- Musician (Instrumentalist - Western) - NVQ level 04
- Musician (Instrumentalist- North Indian) - NVQ level 04
- Musician (Instrumentalist - South Indian) - NVQ level 04
- Welder (Mig, Mag & Flux Cored Arc Welding) - NVQ level 03 & 04
- Welder (Tungsten Inert Gas Welding) - NVQ Level 03 & 04
- Customer Services Assistant- NVQ Level 03
- Foundry Technician - NVQ Level 04
- Livestock Technician - NVQ level 04
- Child Care & Therapy Assistant (Special Needs) - NVQ level 04
- Career Guidance Practitioner - NVQ level 04
- Dental Technician - NVQ level 04
- Electrocardiography (ECG) Assistant - NVQ level 03
- Block Layer - NVQ level 03
- Butler - NVQ level 04
- Document Repairer - NVQ Level 04
- Diesel Generator Maintenance Technician - NVQ Level 03 & 04
- Electric Fence Maintenance Assistant - NVQ Level 03
- Emergency Medical Responder/ Emergency Medical Technician - NVQ Level 03 & 04

### Newly Developed NCSs

- Garment Technician - NVQ level 04
- Rubber Harvesting Assistant - NVQ level 03

### Revised NCSs & Curricular

- Heavy vehicle operator - NVQ Level 03 & 04
- Automobile Mechanic / Automobile Technician - NVQ Level 02, 03 & 04
- Make Up Artist - NVQ Level 03 & 04
- Dairy Farming Assistant - NVQ level 03 & 04
- Occupational Health and Safety Officer - NVQ level 04
- Field Assistant (Agriculture) - NVQ level 03 & 04
- Laboratory Attendant (Construction Sector)/Laboratory Technician (Construction Sector) - NVQ level 03 & 04
- Upholsterer/ Upholstery Technician–NVQ level 03 & 04
- Early Childhood Care and Development Teacher - NVQ level 04
- Tool, Die and Mould Maker - NVQ Level 04
- Sales Representative - NVQ level 04
- Fabricator (Metal) - NVQ level 02, 03 & 04
- Scaffolder- NVQ level 03
- Solar Photovoltaic Systems Technician - NVQ Level 03 & 04
- Municipal Solid Waste Work Supervisor - NVQ Level 03 & 04
- Municipal Solid Waste Operational Assistant - NVQ Level 02

NVQ Level 5 - 6

### Newly Developed NCSs & Curricular

- Industrial Relations and Labour Law Applications - NVQ Level 05
- Vocational And Technical Training Center Management - NVQ level 06
- Fine Arts (Dance & Drumming) - NVQ Level 05 & 06
- Yoga Training and Management - NVQ Level 05
- Early Childhood Development Education - NVQ Level 05

### Revised NCSs & Curricular

- Food Technology - NVQ level 05 & 06

## 2022

NVQ Level 1 - 4

### Newly Developed NCSs & Curricular

- Construction Equipment Operator (Crawler dozer bulldozer) - NVQ Level 03
- Construction Equipment Operator (Pump car) - NVQ Level 03
- Musician (Singer-North Indian) / Musician (Singer- Western) / Musician (Singer- South Indian) - NVQ Level 04
- Operation Theater Technician - NVQ Level 04
- Limb Appliance Technician - NVQ Level 04
- Rubber Sheet Processor - NVQ Level 03
- Telecommunication Tower Rigger / Telecommunication Tower Technician - NVQ Level 03 & 04

### Newly Developed NCSs

- Rubber Sheet Processor - NVQ Level 03
- Coconut Cultivation Assistant - NVQ Level 02 &0 3
- Coconut Pairing - NVQ Level 02 & 03
- Coconut De-Sheller - NVQ Level 02 & 03

### Revised NCSs & Curricular

- Quality Assurance Supervisor (Apparel Production) - NVQ Level 04
- Cake Decorator - NVQ Level 03 & 04
- Plant Nursery Development Assistant - NVQ Level 03 & 04

NVQ Level 5 - 6

### Newly Developed NCSs & Curricular

- Apparel Merchandizing Management (Manufacturing) - NVQ Level 05
- Supply and Materials Management - NVQ Level 05
- Apparel Merchandising Management (Manufacturing) - NVQ Level 05
- Information and Cyber Security Technology - NVQ Level 05
- Electronic Media - NVQ Level 05

### Revised NCSs & Curricular

- Marine Machinery Maintenance Technology - NVQ Level 05
- Telecommunication Technology - NVQ Level 06
- Travel and Tour Management - NVQ Level 05 & 06
- Welding Technology - NVQ Level 05 & 06



**உபேக்ஷா விஜேபண்டார**
உதவி பணிப்பாளர் - தேசிய தேர்ச்சி நியமங்கள், பாடத்திட்டங்கள் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு

# Impact of COVID-19 Pandemic on the Labour Market

## Local Perspective

Sri Lanka is one of the most vulnerable middle-income countries suffer most during this novel virus outbreak. The economic impact of COVID-19 can expect substantially both direct and indirect. There is a tremendous effect due to the pandemic on the Sri Lankan economy. Because, China is one of the major country linked with Sri Lanka in tourism, investment and many agreements. It is the second largest source market for Sri Lanka in terms of tourism and imports and the main supplier of raw materials for textiles. However, China's slow down due to COVID-19 has a significant impacts on Sri Lanka economy as well.

Sri Lankan employers have been terminated in Middle East countries. The decreased demand for exports, tourism, and migrant workers coupled with loss of livelihoods will severely affect the external and internal sectors and the labour market of Sri Lanka. It will be affected the foreign income and Sri Lankan rupee is considerably depreciated against US dollar. Therefore, proactive policy measures should be undertaken to mitigate the economic slowdown in Sri Lanka.

## Sectoral Impact

Workers engaged in industries were more affected than those working in agriculture and services. Job losses were concentrated in the lower-middle of the in-come distribution and more likely to occur in urban areas and among private and informal sector workers. Among industrial subsectors, construction and textile manufacturing, which are sensitive to demand shocks and require workers to be physically present, suffered the largest decline. Wholesale and retail trade, manufacturing and accommodation and food services sectors have been affected by the pandemic and it is severely affected for the young people.

The tourism industry has been identified as key economic sector that faced more challenges due to the COVID-19. The benefits of tourism to economic growth are creating the highest foreign exchange, employment opportunities and revenue for a country.

## Impact on Youth

Before the pandemic, young people were already facing challenges in the labour market. These are worsened by the COVID-19 crisis. Nearly half of young workers in the region are employed in the sectors hit hardest by the crisis. This is one of the reasons that young people face greater labour market disruption and job loss than adults due to pandemic.

Self-employment is an important platform for young people to gain independence and earn a livelihood. More young people may be forced into self-employment as a result of COVID-19. It is vital that it becomes a space for productivity and self-fulfillment. Many young entrepreneurs in the region are showing resilience and creativity and are managing to innovate in response to the crisis.


Investments in developing and implementing quality apprenticeship programmes can also provide an effective pathway for employers and young workers to match skills supply with fast-changing labour market needs and increase productivity. Subsidies for training

programmes are particularly effective in terms of employment outcomes for young workers in low-income countries.

To mitigate the youth employment crisis, governments in the region urgently need to adopt comprehensive labour market policies including wage subsidies and minimizing the impacts on young students of disrupting their education and training.

## Labour Market Trends in Local Perspective


### Job Demand by Formal / Informal Classification




Source: Newspaper Job Advertisements Survey, TVEC

Demand for labour was obtained from the Newspaper Job advertisements survey done by the Tertiary and Vocational Education Commission. As shown in the graph, the highest job demand being continued in the informal sector over the period. However, it has been decreased dramatically from 2018 due to informal sector was severely affected by the COVID-19 pandemic.

### Job Demand by Industry Sector (Based on ISIC Forth Revision)





Source: Newspaper Job Advertisements Survey, TVEC

The adverse impacts of the pandemic were shown in the Accommodation and food service

activities, Other service activities and Manufacturing sectors. Accommodation and food service activities were affected severely due to the restrictions imposed on tourist arrivals to control the spread of the pandemic. Considering the Other service activities, it was affected due to the social distancing requirement discouraged the demand for personal services, such as entertainment activities and beauty culture activities. The adverse impacts of the pandemic on the major export markets also affected due to weakening the demand, especially for textile and wearing apparel related manufacturing activities.

### Unemployment rate by age group




Source: Quarterly Labour Force Survey, Department of Census & Statistics

As shown in the figure, problem of unemployment was more acute among the youth (age 15-24) over the period. The majority of them are new entrants to job market or new job seekers. The youth unemployment rate has increased significantly in 2020 compared to the previous years due to the pandemic.

Sources of References: World Bank

Central Bank of Sri Lanka

Department of Census and Statistics (DCS)


Prepared by;



**W.J.L.A. Damayanthi**
Deputy Director / Senior Statistician
Information Systems Division

Graphs Depicted by;

**Nadeesh De Silva**
Assistant Director
Information Systems Division

# தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறைசார் தொழில்வழிகாட்டல் தரவுத் தளம்

## தொழில்வழிகாட்டல் தொடர்பான கொரியா நாட்டின் உதவி



தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறை சார்ந்த நடைமுறையிலுள்ள தேசிய தொழிற்தகைமை டிப்ளோமா (மட்டம் 5 மற்றும் 6) மற்றும் பட்ட பாடநெறிகள் ஆகியவற்றினை இலக்காகக் கொண்டு தொழில்வழிகாட்டல் தரவுத் தளமொன்றினைத் தயாரிப்பதற்காக 6 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு கொரியா நாட்டின் KOICA நிறுவகமானது முன்வந்துள்ளது.

இத் திட்டமானது திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சின் நேரடி பங்களிப்புடன் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தலைமையின் கீழ் மேற்கொள்வதற்கு அவசிய ஆரம்பக்கட்ட ஆய்வு நடவடிக்கையின் பொருட்டு KOICA இன் நிபுணத்துவக் குழுவொன்று 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாவது கிழமையில் நாட்டிற்கு வருகைதந்து உரிய திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான ஆய்வில் ஈடுபட்டது.

உரிய நிபுணத்துவ குழு தமது அறிக்கையினை 2022.03.18 ஆம் திகதியன்று அமைச்சில் நிறுவகத் தலைவர்களிடம் முன்வைத்துள்ளதுடன் இத் திட்டத்தினை நான்கு வருட காலப்பகுதியில் (2022 - 2026) நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



**மஞ்சுள விதானபத்திரண**
பதில் பணிப்பாளர் - தொழிற்துறைசார் உறவுகள் பிரிவு

### நூலாசிரியர் குழாம்

**திரு. பீ. ஏ. எம். யூ. கனேபொல அவர்கள்** - பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

**திரு. மஞ்சுள விதானபத்திரண அவர்கள்** - பதில் பணிப்பாளர்
தொழிற்துறைசார் உறவுகள் பிரிவு

**திருமதி. பீ.பீ.பீ. நாணயக்கார அவர்கள்** - பதில் பணிப்பாளர்
தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு

**திரு. அனுர வீரக்கோன் அவர்கள்** - பிரதி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

**திருமதி தமயந்தி விக்கிரமசிங்க அவர்கள்** - பிரதி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

**திரு. டபில்யூ.கே.டீ. ஹரிஸ்சந்திர அவர்கள்** - பிரதி பணிப்பாளர்
பாடநெறிகளை பதிவு செய்தல், அங்கீகரித்தல் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு

**திரு. சமன் விக்கிரமசிங்க அவர்கள்** - உதவி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

**திரு. நதீஸ் த சில்வா அவர்கள்** - உதவி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

**திரு. பிரியந்த தர்மசேன அவர்கள்** - உதவி பணிப்பாளர்
திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு

**திருமதி. அனு'ர த சில்வா அவர்கள்** - உதவி பணிப்பாளர்
தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு

**செல்வி பாரீனி விதானகே அவர்கள்** - உதவி பணிப்பாளர்
திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு

**திருமதி உபேக்ஷா விஜேபண்டார அவர்கள்** - உதவி பணிப்பாளர்
பயிற்சி நியமங்கள், பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு

கருத்துக்கள்
மற்றும்
யோசனைகள்

**Tertiary and Vocational Education Commission**
'Nipunatha Piyasa', 354/2, Elvitigala Mawatha,
Colombo 05, Sri Lanka.
Tele : +94(0) 11 760 8000 Fax : +94(0) 11 255 5007
info@tvec.gov.lk, www.tvec.gov.lk